# TET PAPER I & II

## பாரதிதாசன் கவிதைகள் வாழ்க்கை வரலாறு

1. 1891 ஏப்ரல் 29, புதன்இரவு 10.15 மணிக்குப்புதுவையில்சுப்புரத்தினம்பிறந்தார். தந்தைகனகசபை, தாய்இலக்குமி.
.
2. 1895 ஆசிரியர்திருப்புளிசாமிஅய்யாவிடம்தொடக்கக்கல்வி. இளம்வயதிலேயேபாடல்புனையும் ஆற்றல்பெற்றார்.
3. 1908 முதுபெரும்புலவர்பு .அ .பெரியசாமியிடமும்பின்னர், புலவர்பங்காருபத்தரிடமும்தமிழ்இலக்கணஇலக்கியங்களையும், சித்தாந்தவேதாந்தப்பாடங்களையும்கற்றல். மாநிலத்திலேயேமுதல்மாணவராகச்சிறப்புற்றார். வேணுநாயக்கர்வீட்டுத்திருமணத்தில்பாரதியாரைப்பாவேந்தர்சந்தித்தார்.
4. 1909 கல்விஅதிகாரிகையார்உதவியால்காரைக்காலைச்சார்ந்தநிரவியில்ஆசிரியராகப்பணிஏற்றார்.
5. 1910 வ.உ.சி-யின்நாட்டுவிடுதலைஆர்வத்தால்கனிந்திருந்தபாவேந்தர்பாரதியார், வ.வே.சு, டாக்டர்வரதராசுலு, அரவிந்தர்போன்றோர்க்குப்புகலிடம்அளித்தார். பாரதியாரின் 'இந்தியா' ஏட்டைமறைமுகமாகப்பதிப்பித்துத்தருதல். பாவேந்தர்அனுப்பிவைத்ததுப்பாக்கியேஆஷ்கலெக்டரின்உயிரைப்பறித்ததுஎன்பதுவரலாறு.
6. 1916 கவிஞரின்தந்தையார் (23-1-1916) இயற்கைஎய்தினார். 1918 பாரதியாருடன்நெருங்கியபழக்கத்தால்சாதி, மதம்கருதாததெளிந்தஉறுதியானகருத்துக்களால்ஈர்ப்புற்றுப்புலமைச்செருக்கும்மிடுக்கும்மிகுந்தநடையில்கவிதைகள்எழுதினார். 10 ஆண்டுக்காலம்பாரதியாருக்குஉதவியும்உறுபொருள்கொடுத்தும்தோழனாய்இருந்தார்.
7. 1919 திருபுவனையில்ஆசிரியராகஇருக்கையில்பிரெஞ்சுஅரசுக்குஎதிராகச்செயல்பட்டார்என்றுகுற்றம்சாட்டிஒன்றேகால்ஆண்டுசிறைபிடித்த அரசு, தனது தவற்றையுணர்ந்துவிடுதலைசெய்தது. வேலைநீக்கவழக்கில்கவிஞர்வென்றுமீண்டும்பணியில்சேர்தல்.
8. 1920 இந்தியவிடுதலைஅறப்போராட்டத்தில்பங்கேற்றல், புவனகிரிபெருமாத்தூர்பரதேசியார்மகள் - பழனியம்மையைமணந்தார். தம்தோளில்கதர்த்துணியைச்சுமந்துதெருத்தெருவாய்விற்றார்.

9. 1926 ஸ்ரீமயிலம்சுப்பிரமணியர்துதியமுதுநூலைஇயற்றல். 1928 தன்மான (சுயமரியாதை) இயக்கத்தில்பெரியார்ஈ.வெ..ராவுடன்இணைதல், பகுத்தறிவுக்கொள்கையைமேற்கொளல்.

10. 1929 'குடியரசு' 'பகுத்தறிவு' ஏடுகளில்பாடல், கட்டுரை, கதைஎழுதுதல்குடும்பக்கட்டுப்பாடுபற்றிஇந்தியாவிலேயேமுதன்முதலில்பாட்டெழுதியமுதல்பாவலர்என்றசிறப்புப்பெறுதல்.

11. 1930 பாரதி, புதுவைவருகைக்குமுன்னும்பின்னும்பாடியசிறுவர்சிறுமியர்தேசியகீதம், தொண்டர்நடைப்பாட்டு, கதர்இராட்டினப்பாட்டுஆகியவற்றைநூல்வடிவில்வெளியிடல், தொடர்ந்துசஞ்சீவிபர்வதத்தின்சாரல், தாழ்த்தபட்டோர்சமத்துவப்பாட்டுநூல்களைவெளியிடல்.டிசம்பர், 10-ல் 'புதுவைமுரசு' கிழமைஏட்டின்ஆசிரியர்பொறுப்பேற்றல்.

12. 1931 புதுவைமுரசு' (5-1-1931) ஏட்டில்செவ்வாய்உலகயாத்திரைகட்டுரைவரைதல், சுயமரியாதைச்சுடர்என்ற 10 பாடல்களைக்கொண்டநூலைக்கிண்டல்காரன்என்றபெயரில்வெளியிடல்.

13. 1933 மா. சிங்காரவேலர்தலைமையில்சென்னையில்நடைபெற்றநாத்திகர்மாநாட்டின்பதிவேட்டில் 'நான்ஒருநிரந்தரமானநாத்திகன்' என்றுஎழுதிக் கையெழுத்திடல்.

14. 1934 இரணியன்அல்லதுஇணையற்றவீரன்நாடகம்ஈ.வெ.ராபெரியார்தலைமையில்நடைபெற்றது.

15. 1935 இந்தியாவில்முதல்பாட்டேடான 'ஸ்ரீசுப்பிரமணியபாரதிகவிதாமண்டலம்' தெடங்கினார்.

16. 1938 பாரதிதாசன்கவிதைகள்முதல்தொகுதியைக்குத்தூசிகுருசாமி, குஞ்சிதம்குருசாமி, நாராயணசாமிநாயுடுஆகியோர்பொருள்உதவியால்வெளியிடுதல். பெரியார் 'தன்மானஇயக்கத்தின்சிறந்தபாவலர்' என்றுபாராட்டுதல்.

17. 1939 'கவிகாளமேகம்' திரைப்படத்திற்குக்கதைஉரையாடல்பாடல்எழுதுதல்.

18. 1941 'எதிர்பாராதமுத்தம்' (குறுங்காவியம்) காஞ்சிபொன்னப்பாவால்வானம்பாடிநூற்பதிப்புக்கழகத்தில்வெளியிடல்.

19. 1944 பெரியார்ஈ.வெ.ராமுன்னிலையில்தலைமகள்சரசுவதிதிருமணம். மணமகன்புலவர்கண்ணப்பர்

20. 1945 புதுவை, 95, பெருமாள்கோவில்தெரு, வீட்டைவாங்குதல், தமிழியக்கம் ( ஒரேஇரவில்எழுதியது ) நூல்வெளியிடல்.

21. 1946 'முல்லை' இதழ்தொடங்கப்பட்டது. பாவேந்தர் 'புரட்சிக்கவி' என்றுபோற்றப்பட்டுரூ. 2,000 கொண்டபொற்கிழியைநாவலர்சோமசுந்தர

பாரதியார்தலைமையில்பொன்னாடைபோர்த்தி, பேரறிஞர்அண்ணாஅவர்கள்வழங்கினார். 8-11-1946-ல்முப்பத்தேழாண்டுதமிழாசிரியர் பணிக்குப்பின்பள்ளியிலிருந்துஓய்வுபெறுதல்.

22. 1947 புதுக்கோட்டையிலிருந்துகுயில்இதழ்வெளியீடு.

23. 1948 குயில்மாதஏட்டிற்குத்தடை.

24. 1949 பாரதிதாசன்கவிதைகள் 2-ம்தொகுதிவெளியீடு.

25. 1950 திருச்சியில்பாரதிதாசனார்க்குமணிவிழா.

26. 1955 புதுவைச்சட்டமன்றத்தேர்தலில்வெற்றிபெற்றுஅவைத்தலைமைஏற்றல். 1958 'குயில்' கிழமைஏடாகவெளிவருதல். தமிழகப்புலவர்குழுவின்சிறப்புறுப்பினராதல்.

27. 1959 திருக்குறளுக்கு 'வள்ளுவர்உள்ளம்' என்றஉரைவிளக்கத்தை (1-11-59) எழுதுதல்.

28. 1961 சென்னைக்குக்குடிபெயர்தல். 'பாண்டியன்பரிசு' கதையைப்படமாக்கமுயற்சித்தல்.

29. 1962 -சென்னையில்மீண்டும் 'குயில்' கிழமைஏடாகமலர்தல்.
அனைத்துலகக்கவிஞர்மன்றத்தோற்றம்'
தமிழ்எழுத்தாளர்சங்கம்சார்பில்மூதறிஞர்இராசாசிபொன்னாடைஅணிவித்து, கேடயம்வழங்கல்.

30. 1963 - 'பாரதியார்வரலாறு' திரைப்படம்எடுக்கத்திட்டமிட்டுஎழுதிமுடித்தல்.

31. 1964 -பாரதியார்வரலாற்றுத்திரைப்படத்திற்குத்தீவிரமுயற்சி. சென்னை, பொதுமருத்துவமனையில்ஏப்ரல் 21-ல்இயற்கைஎய்தினார். மறுநாள்புதுவைக்கடற்கரையில்உடல்அடக்கம்.

32. 1965 -ஏப்ரல் 21
புதுவைக்கடற்கரைசார்ந்தபாப்பம்மாகோயில்இடுகாட்டில்பாரதிதாசன்நினைவுமண்டபம், புதுவைநகராட்சியினரால்எழுப்பப்பட்டது.

33. 1968
சென்னையில்நடைபெற்றஉலகத்தமிழ்மாநாட்டின்போதுபாவேந்தரின்திருஉருவச்சிலை, சென்னைமெரீனாகடற்கரையில்திறந்துவைக்கப்பட்டது.

34. 1970 கவிஞரின் 'பிசிராந்தையார்' நாடகநூலுக்குச்சாகித்யஅகாடமிவிருதுவழங்கப்பட்டது.

1971 ஏப்ரல் 29-ல்பாவேந்தர்பிறந்தநாள்விழாபுதுவைஅரசுவிழாவாகக்கொண்டாடப்பெற்றது. ஒவ்வோராண்டும்அரசுவிழாவாகஇதுதிகழ்கிறது. புரட்சிக்கவிஞர்வாழ்ந்தபெருமாள்கோயில்தெரு, 95-ஆம்எண்இல்லம்அரசுடைமையாயிற்று. அங்கேபுரட்சிக் கவிஞர்நினைவுநூலகம், காட்சிக்கூடம்அமைந்துள்ளன.

35. 1972 ஏப்ரல் 29-ல் புரட்சிக்கவிஞர் முழு உருவச்சிலை புதுவை அரசினரால்திறந்து வைக்கப் பெற்றது.

36. 1978 எம்.ஜி.ஆர். தலைமையிலான தமிழக அரசு முதன்முறையாக பாரதிதாசன் பிறந்தநாள் விழாவை அரசு விழாவாக அறிவித்துக் கொண்டாடியது. அவ்வாண்டுமுதல் 'பாவேந்தர்பாரதிதாசன்விருது' ( ரூ. 10,000 தொகை - 4 பவுன்தங்கப்பதக்கம் ) வழங்கப்பட்டது. முதன்முதலாகஇப்பரிசைப்பெற்றவர்பாவேந்தரின்சீடர் 'சுரதா'. பாவேந்தர்பெயரில் 'பாரதிதாசன் பல்கலைக்கழகம்' அமைத்ததும் எம்.ஜி.ஆர். அரசு தான்.

37. 1990 பாவேந்தர்நூற்றாண்டானஇவ்வாண்டுதிரைத்துறையில் 'பாவேந்தர்பரிசு' என்று முதன் முதலில் ஏற்படுத்தினார் கலைஞர் மு. கருணாநிதி. இவரது தலைமையிலான தமிழக அரசு வழங்கிய 'பாரதிதாசன் விருதை' முதன்முறையாகப் பெற்றவரும் பாவேந்தரின் சீடர் 'சுரதா' தான்.

38. 1991 கலைஞர்மு. கருணாநிதி தலைமையிலான தமிழக அரசு பாவேந்தரின் நூற்றாண்டு நிறைவையொட்டி, பாவேந்தரின்நூல்கள் அனைத்தையும்நாட்டுடைமைஆக்கியது. பாவேந்தரின்குடும்பத்தினர்ஒவ்வொருவருக்கும்தலாரூ. 2 லட்சம்வழங்கியது.

G.RAMKUMAR M.A.M.A.B.Ed.D.T.Ed.,
GURU EDUCATIONAL CENTRE,
T.N.PALAYAM,GOBI (TK),
ERODE (DT)-638 506.
CELL : 99444 77587,99444 77581.
Email:raam961@gmail.com